Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JULY 25, 2024

வியாழக்கிழமை ஜூலை 25, 2024 | ஒளி: 10 கதிர் 2302 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# 1,700 ரூபாய் இரத்து

தோட்டத் தொழிலாளர்களுக்கான 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தலைத் தொழில் அமைச்சு இரத்துச் செய்து, வர்த்தமானி அறிவித்தலை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமான 1,700 ரூபாவை சம்பளச் சபையின் ஊடாக வழங்குவதற்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகத் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.



# இனி யாருக்கு கடிதம் எழுதுவது?



என்னுடைய பாதுகாப்பு தொடர்பில், இனி நான் யாருக்கு கடிதம் எழுதுவது என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன், பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். என்னை கொல்லச் சதி நடப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில் என்னுடைய பாதுகாப்பு விடயம் தொடர்பாக நான் பொலிஸ்மா அதிபரிடம் செவ்வாய்க்கிழமை (23) கடிதம் கையளித்தேன். ஆனால், அவர் இன்று புதன்கிழமை (24 ) பதவியில் இருந்து நிறுத்தப் பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# “250 மீனவர்கள் கைது; நடவடிக்கை தேவை”

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



இந்த ஆண்டு ஜனவரி முதல் தற்போது ஜூலை 22ஆம் திகதி வரை மட்டும் இந்திய மீனவர்கள் 250 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில், ஆண்டொன்றில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச கைது எண்ணிக்கை இதுவாகுமென தமிழக முதல்வர் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

“இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும் வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தொடர்ச்சி P2



# தேஷபந்து தென்னகோனுக்கு இடைக்காலத் தடை

- ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட 08 தரப்பினர் மனுக்களை தாக்கல் செய்தனர்
- கடந்த வியாழக்கிழமை அன்று சுமார் எட்டு மணி நேரம் விசாரணை நீடித்திருந்தது
- அரசியலமைப்பு பேரவையினால் உத்தியோகபூர்வமாக அங்கிகரிக்கப்படவில்லை

தேஷபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதை தடுத்து உயர்நீதிமன்றத்தினால் வியாழக்கிழமை (24) உயர்நீதிமன்றத்தால், இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபராக, தேஷபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட 08 தரப்பினர் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு அனுமதியளித்து இந்த உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது.

இடைக்கால தடையுத்தரவு, மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவுறும் வரை செல்லுபடியாகும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்தன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் குறித்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மனு மீதான விசாரணை 6 நாட்கள் நடைபெற்றதுடன் கடந்த வியாழக்கிழமை (18) சுமார் 8 மணித்தியா லங்களுக்கு விசாரணை நீடித்திருந்தது.

தொடர்ச்சி P2

# “வேட்பாளர்களை கட்டுப்படுத்த கட்டணத்தை இலட்சமாக்கவும்”



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையை வரையறுக்க கட்டுப்பணத்தை இலட்சமாக்குமாறு எதிரணியின் சுயாதீன எம்.பியான டலஸ் அழகப்பெரும வலியுறுத்தினார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரின் கட்டுப்பணத்தை 25 இலட்சமாகவும், சுயாதீன ஜனாதிபதி வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 இலட்சமாகவும் திருத்தம் செய்ய வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

# இரண்டாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்பு

■ மலையக நிருபர்கள்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் தடைக்கல்லாக செயற்பட்டுவரும் களனிவெளி உள்ளிட்ட சில கம்பனிகளுக்கு எதிராகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், தோட்டத் தொழிலாளர்கள் பணிபுறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# வர்த்தமானி வாபஸுக்கு வருந்தினார் வடிவேல்

■ ஆ.ரமேஸ்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் நாளாந்த சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என தொழில் அமைச்சு வெளியிட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டுள்ளமை வருத்தமளிக்கிறது என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளரும்

தொடர்ச்சி P2

**“ வர்த்தமானி அறிவித்தல்களைச் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு பெருந்தோட்ட நிறுவனங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்**



# மொட்டுவின் முட்டு இன்றேல் ரணில் அவுட்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதியுடன் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சரத் பொன்சேகா மற்றும் ராஜித சேனாரட்னவை தவிர வேறு எவரும் இணைய மாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே துஷார இந்துநில் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

# “முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்கவும்”

கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்த விடயத்தில் அரசு மன்னிப்புக் கேட்டு பிரச்சினையில் இருந்து தப்பியோ முயற்சிக்கக் கூடாது. ஜனாஸாக்கள் தகனம் செய்த விடயத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.



தொடர்ச்சி P2

# வீதியில் காயப்போட்டு காவல் காத்தவர் மீது சூடு



■ சண்முகம் தவசீலன்

அறுவடை செய்த நெல்லினை வீதியில் காயப்போட்டுக் காவல் காத்து உறங்கிக்கொண்டிருந்த கிளிநொச்சி விவசாயியும் கமக்கார அமைப்பின் செயலாளருமான செல்லையா கிருஸ்ணராஜா (வயது 42) மீது, புதன்கிழமை (24) அதிகாலை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த கமக்கார அமைப்பின் செயலாளர் மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜனாஸாக்கள் எரித்தமைக்கான மன்னிப்பை ஏற்கமுடியாது




கொரோனாவினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமைக்கு மன்னிப்புக் கோரும் அமைச்சரவைத் தீர்மானத்தை ஏற்க முடியாது. முஸ்லிம் சமூகம் ஒரு போதும் ஏமாறப்போவதில்லை முஸ்லிம் எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) போர்க்கொடி தூக்கினர்.

கொரோனாவால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யும் தீர்மானத்தை எடுத்தவர்கள் யார் என்பதனை வெளிப்படுத்துமாறும் கோரிநின்றனர்.

தொடர்ச்சி P2

# “மன்னிப்பு தீர்வாகாது”

தமிழர்களுக்கு எதிரான கறுப்பு ஜூலை படுகொலைகள் நடந்து 41 வருடங்களின் பின்னர் அமைச்சர் ஒருவரால் தற்போது சொல்லப்பட்ட மன்னிப்பு என்ற வார்த்தை எந்த வகையிலும் தமிழருக்குத் தீர்வாக அமைந்துவிடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இனி யாருக்கு கடிதம் எழுதுவது?

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சி பலிக்காது என்பது ஜனாதிபதியின் விருப்பத்துக்கு அமைய நியமிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபரின் நியமனத்திற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்ததன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பில் நீதிமன்றம் அவரின் சேவைக்கு இடைக்காலத்தடை விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது .இந்த பொலிஸ் மா அதிபரிடம்தான் என்னைக்கொல்ல நடக்கும் சதி தொடர்பிலும் எனது பாதுகாப்பு குறித்தும் நான் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளேன், அதற்கு யார் பொறுப்பு என்று வினவினார்.

அதேநேரம் இங்கு கொரோனா தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டமைக்கு அரசு முஸ்லிம்களிடம் மன்னிப்புக்கேட்டது தொடர்பில் பேசப்பட்டது.அந்த நேரத்தில் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவளித்து அரசைப் பாதுகாத்த முஸ்லிம் எம்.பிக்களும் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் ,அவ்வாறு ஆதரவளித்தவர்கள் இன்று அதனைப்பற்றி இந்த சபையில் பேசுவது வேடிக்கையானது என்றார்.

# மொட்டுவின் முட்டு இன்றேல் ரணில் அவுட்

அவர் அதன்போது மேலும் கூறுகையில்,

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் நாங்கள் உலக நாடுகளிடையே பின்னடைவிலேயே இருக்கின்றோம். வளங்கள் வரையறுக்கப்பட்டுள்ள எம்மைப் போன்ற நாடுகளில் இவ்வாறான தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் உலக நாடுகளுடன் தொழில்நுட்பத்தில் முன்னேற்றமடைய வேண்டும்.

எமது ஜனாதிபதிகள் காலத்திற்குக் காலம் அரசியல் வாக்குறுதிகளை வழங்குகின்றனர். முன்னர் இலவச வை-பை தொடர்பில் கூறினாலும் இன்னும் பிள்ளைகளுக்குத் தொலைத்தொடர்பு சமிக்ஞைகளைத் தேடி மரம் ஏறும் நிலைமை தொடர்கின்றது. இந்நிலையில் சஜித் பிரேமதாச நாடு முழுவதும் சக்வல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நவீன வகுப்பறைகளை உருவாக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றார்.

இதேவேளை நாடு பொருளாதார ரீதியில் பாதாளத்தில் விழுந்துள்ளது. பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாகக் கூறி 7 மூளைகள் உள்ளவர் என பசில் ராஜபக்ஷ பொறுப்பேற்று பொருளாதாரத்தை இன்னும் பாதாளத்திற்குள் தள்ளினார்.

அதேபோன்று மூளைகளால் நிறைந்த கப்பல் என்று கூறப்பட்ட ரணில் விக்ரமசிங்க சர்வதேசம் போன்றவற்றிடம் கடன்களைப் பெற்று அப்பாவி மக்களிடையே சீர் செய்யவென வரிகளை அறவிட்டு பொருளாதாரத்தை இன்னும் குழப்பத்திற்குள் கொண்டுவந்தார்.

இப்போது அரசியலில் பல்வேறு செயற்பாடுகளை அந்த ஜனாதிபதி செய்கின்றார். தேர்தலுக்கு இன்னும் சில காலமே இருக்கும் நிலையில் 22ஆவது திருத்தம் என புதிய பந்தை உருட்டுகின்றார்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளைக் குழப்பவே இவ்வாறு செய்கின்றார். ரணில் விக்ரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைக்காத நிலைமையே உள்ளது. அங்கே நாமல், பிரசன்ன ரணதுங்க என்று குழுக்கள் உருவாகியுள்ளன. இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைக்கவில்லை என்ற பிரச்சினையை நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள் அதில் எமது எம்பிக்களை இழுக்க வேண்டாம்.

உங்கள் பக்கம் வருவதென்றால் சரத்பொன்சேகாவும் ராஜித சேனாரட்னவும் மட்டுமே வரலாம். அவர்கள் இருவரும் எங்கள் அரசியல் நடவடிக்கையில் இருப்பவர்கள் அல்ல, அவர்கள் குழாயொன்றில் சிக்கியுள்ளனர். பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைக்காவிட்டால் ரணில் விக்ரமசிங்க போட்டியிட மாட்டார். அவர் போட்டியிடாவிட்டால் ராஜித, பொன்சேகாவுக்கு போக இடமிருக்காது.

எவ்வாறாயினும் எமது எம்.பிக்கள் எவரும் வர மாட்டார்கள். ஆனால் வரும் 8ஆம் திகதி 35 பேர் எங்களுடன் கூட்டணி அமைக்கவுள்ளனர். இதன்படி வருபவர்கள் சஜித்தின் முகாமுக்கே வருவார்கள் என்றார்.

# “வேட்பாளர்களை கட்டுப்படுத்த கட்டணத்தை இலட்சமாக்கவும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவி டம் கோரிக்கை விடுத்தது. இந்த யோசனைக்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணமும், சுயாதீன வேட்பாளரிடமிருந்து 75 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகிறது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இரண்டு வேட்பாளர்களைத் தவிர ஏனைய வேட்பாளர்களின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டது. எவ்விதமான வரையறைகளும் இல்லாமல் வேட்பாளர்கள் போட்டியிடுவதால் அரச நிதியே வீண் விரயமாக்கப்படுகிறது.

இதற்கு பதிலளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை அவசரமாகக் கொண்டு வரவில்லை. சட்டத்தையோ அல்லது சட்டத் திருத்தத்தையோ விரைவாகக் கொண்டு வர முடியாது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்டுப்பணம் தொடர்பான திருத்தத்தை விரைவில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு முன்வைக்க முடியாது. அதற்கான காலவகாசம் போதாது.

எனவே, 2029ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என்றார்.

# இடைக்காலத் தடை

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஷமில் பெரேரா, சாலிய பீரிஸ், விரான் கொரயா, உபுல் ஜயசூரிய ஆகியோரும், சட்டத்தரணிகளான சுரேன் பெர்னாண்டோ, திஷய வேரகொட உள்ளிட்டோரும் ஆஜராகியிருந்தனர்.

பொலிஸ் மா அதிபராக நியமனம் செய்வதற்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட தேஷ்பந்து தென்னகோனின் பெயர், அரசியலமைப்பு பேரவையினால் உத்தியோகப்பூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை என மனுதாரர்கள் தமது மனுக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தகைய சூழலில் அவரை அந்தப் பொறுப்பில் அமர்த்த ஜனாதிபதி எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என்றும் அதன் காரணமாகக் குறித்த நியமனத்தைச் செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடுமாறு மனுக்களின் ஊடாக மனுதாரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த மனுக்களில் சபாநாயகர் உள்ளிட்ட அரசியலமைப்பு பேரவையின் அங்கத்தவர்கள், பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன், சட்ட மா அதிபர் உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாஸாக்கள் எரித்தமைக்கான மன்னிப்பை ஏற்கமுடியாது

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்தும் ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் நோக்கத்திலும் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மன்னிப்பு விடயத்துக்கு ஏமாறப்போவதில்லை என்றனர்.

பாராளுமன்றத்தில், விசேட கூற்றை முன்வைத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் கூறுகையில்,

கொரோனா தகனத்துக்கு உள்ளாக்கப்பட்ட முஸ்லிம்களின் பெயர் பட்டியலை வழங்குமாறு முன்னாள் சுகாதார அமைச்சரிடம் இந்த சபையில் கேட்டேன். அதற்கு அவர், அவ்வாறான எந்த தகவலும் இல்லை என பதிலளித்தார் இது உண்மையை மறைப்பதற்குச் செய்யும் நடவடிக்கை. அதனால் தகனத்துக்குள்ளான முஸ்லிம்களின் பெயர் பட்டியலை அரசாங்கம் தரவேண்டும் என்றார்.

எல்லாவற்றையும் செய்துவிட்டு முஸ்லிம் சமூகத்திடம் அரசு மன்னிப்பு கோரி இதனை முடித்துக்கொள்ள முடியாது. இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். இதற்கு காரணமானவர்களின் பெயர் பட்டியலை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

இதனையடுத்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான முஜிபுர் ரஹ்மான், கொரோனாவால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமைக்கு மன்னிப்பு கோர அரசாங்கம் தீர்மானித்துள்ளதன் மூலம் இந்த நடவடிக்கை பலவந்தமாக செய்யப்பட்டது என்பது உறுதியாகியுள்ளது. இது திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால் இதனை யார் செய்தார்கள் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான மரிக்கார், அரசாங்கத்தின் மன்னிப்பு கோரும் தீர்மானம் ராஜபக்ஷவினரை பாதுகாப்பதற்கான நடவடிக்கை. தகனம் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானம் அரசியல் தீர்மானம். அதனால் இதற்கு காரணமானவர்கள் யார்? அவர்களை இனம் கண்டு, வெளிப்படுத்த வேண்டும். அத்துடன், இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த தேசிய காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ஏ.எல்.எம்.அதாவுல்லா,

கொரோனாவினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்தமை தொடர்பில் அமைச்சரவை மன்னிப்பு கோருவதற்கு எடுத்த தீர்மானத்துக்கு ஜனாதிபதி, பிரதமருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், பாராளுமன்றத்துக்குத் தெரியாமல் ஜனாஸாக்களை எரிப்பதற்கு முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாரச்சி வர்த்தமானி அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார். இது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறும் நடவடிக்கை இது தொடர்பாக நான் அன்று கடும் எதிர்ப்பு தெரிவித்தேன். எனவே, மன்னிப்புடன் இதனை முடிக்காமல், பாராளுமன்றத்துக்குத் தெரியாமல் வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டமை தொடர்பில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்ற விடயம் தொடர்பில் தெரிவிக்க வேண்டும். அத்துடன், இந்த நடவடிக்கைக்கு எதிராக யாருக்குத் தண்டனை கொடுக்கப்போகிறோம் என்பதை இந்த பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான இம்ரான் மஹ்ரூப் கூறுகையில், கொரோனாவினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்தமை தொடர்பில் மன்னிப்பு கோரும் அமசஹஸ்ரவை தீர்மானத்தை ஏற்க மாட்டோம். ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளை இலக்காகக்கொண்டே இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் பொதுஜன பெரமுனவின் ஆதரவு தேவை. அவர்களின் ஆதரவுடன் போட்டியிடுவதானால் முஸ்லிம் மக்கள் ஒரு வாக்கைக் கூட வழங்க மாட்டார்கள். அதனால், முஸ்லிம்களின் வாக்குகளிப் பெறவும் ஜனாஸாக்களி எரிக்கக் காரணமாகவிருந்த பொதுஜன பெரமுனவினரை பாதுகாக்கவும் தான் முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகின்றோம் என்ற இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முஸ்லிம் சமூகம் ஒரு போதும் ஏமாறப்போவதில்லை என்றார்.

# “250 மீனவர்கள் கைது; நடவடிக்கை தேவை”

மீனவர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்று வருகிறது. இதனால் மீனவ மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, இந்த நிலைமையைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து இலங்கையிலிருந்து 87 மீனவர்களையும், 175 படகுகளையும் விரைவாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வர்த்தமானி வாபஸுக்கு வருந்தினார் வடிவேல்

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் வழங்கப்பட வேண்டுமெனத் தொழில் அமைச்சு இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டிருந்தது.

இருந்த போதிலும் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களைச் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு பெருந்தோட்ட நிறுவனங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்நிலையில், தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 1,700 ரூபாய் நாளாந்த சம்பளம் தொடர்பான வர்த்தமானி வழக்கின் இரண்டாம் விசாரணையை நடத்திய உயர் நீதிமன்றம் வர்த்தமானிக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவை அண்மையில் பிறப்பித்திருந்தது.

இவ்வாறான நிலையில், 1,700 ரூபாய் வர்த்தமானி வாபஸ் பெறப்பட்டமை வருத்தமளிக்கிறது என்றார்.

# வீதியில் காயப்போட்டு காவல் காத்தவர் மீது சூடு

துணுக்காய் பிரதேசத்தில் கல்விளான் பகுதியில் இந்த சம்பவம், வியாழக்கிழமை(24) அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனது நெல்லினை அறுவடை செய்து வீதியில் காயவைத்துவிட்டு இரவு காவல் காத்து வந்துள்ள நிலையில், வீதியோரமாக உறங்கிக்கொண்டிருந்துள்ளார்.

புதன்கிழமை (24) இனம் தெரியாத நபர்களால் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்விளான் கமக்கார அமைப்பின் செயலாளராக இவர் இருப்பதாகவும் அங்கு இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வில் இடம்பெற்றுவரும் போட்டி காரணமாகவே இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகப் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளார்கள். எனினும், இந்த துப்பாக்கிப்பிரயோக சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக மல்லாவி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இரண்டாவது நாளாகவும்...

நுவரெலியா, நானு ஓயா மற்றும் டிக்கோயா ஆகிய பிரதேசங்களில் களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் அனைத்து தோட்டத் தொழிலாளர்களும் கட்சி பேதமின்றி பணிபுறக்கணிப்பில் செவ்வாய்க்கிழமை(23) ஈடுபட்டனர். இப் பணிபுறக்கணிப்பு இரண்டாவது நாளாக புதன்கிழமையும்(24) முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜீவன் தொண்டமானுக்கு ஆதரவு தெரிவித்து தலவாக்கலை மற்றும் ஹொரரண பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்ட தொழிலாளர்களும் புதன்கிழமை (24) பணிபுறக்கணிப்பு நடவடிக்கையில் குதித்திருந்தனர். அந்த வகையில், ஹொலிரூட், வட்டகொட, லோகி,

கிரேட்வெஸ்டன், பேரம், மட்டுகலை, சமர்செட், ரதல்லை, கிளரென்டன், கெல்சி மஹாலியா ஆகிய தோட்டத் தொழிலாளர்களும் பணிபுறக்கணிப்பில் குதித்துள்ளனர்.

அதேபோல, ஹொரரண பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் மஸ்கெலியா பிரதேசத்தில் இயங்கும் மாநிலூ, ஸ்டோக்ஹோம், கவரவில, ஹோல்டன், யார்லோன் ஆகிய தோட்டங்களிலும் தொழிலாளர்கள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் உள்ளியட்ட சகாக்களைக் கைது செய்து நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை (22) உத்தரவு பிறப்பித்திருந்தது.

# “முஸ்லிம்களுக்கு...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

கொரோனா தொற்று பறவை யை காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய தகன கொள்கை என்ற தீர்மானத்திற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் ஆதரவளித்தனர். இதன் மூலம் முஸ்லிம் மக்களின் சமய, கலாசார உரிமைகள் முற்றாக மீறப்பட்டன. நாட்டில் இனவாதமும் மதவாதமும் முன்னெடுக்கப்பட்டன.

முஸ்லிம்களை இலக்கு வைத்து அடக்கமா தகனமா என்ற விவகாரம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவை தவறான தீர்மானத்தை எடுத்தது. இந்த தீர்மானம் எந்த நபரின் அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது? இது தொடர்பாக ஆலோசனை வழங்கியது யார்? இந்த ஆலோசனை தொடர்பாக அரசியல் தலைமைகள் பரிசீலித்து ஆராய்ந்து பார்க்காததன் காரணம் என்ன? போன்ற விடயங்கள் தொடர்பான காரணங்களை அரசு முன்வைக்க வேண்டும்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைகளைக் கைவிட்டு, முஸ்லிம் மக்களுக்கு எதிராக இவ்வாறான குற்றச் செயலைச் செய்யத் தவறான தீர்மானங்களை எடுத்தவர்களை வெளிப்படுத்தி, தகனமா அடக்கமா விவகாரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்டு பிரச்சினையிலிருந்து தப்பியோட அரசு முயற்சிக்கக் கூடாது என்றார்.

# “மன்னிப்பு...

அதன்போது அவர் தெரிவிக்கையில், ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 70களின் பிற்பகுதியில் 1980 களின் ஆரம்பத்தில் பல்வேறுபட்ட விடுதலை இயக்கங்கள் உருவாகியிருந்தன. அவ்வாறான இயக்கங்களின் வரலாற்றில் தமிழீழ இராணுவம் எனும் கட்டமைப்பை உருவாக்கி ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக இருந்த ஒருவரான தம்பாபிள்ளை மகேஸ்வரனை இந்த சபையில் நினைவில் கொள்கின்றேன்.

இவர் வசதி படைத்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் இந்த மண்ணில் தமிழருக்கு எதிரான கொடுமைகளைக் கண்டு தன்னை போராளியாக மாற்றிக்கொண்டிருந்தார். லண்டனில் பொறியியல்துறையில் கற்ற இவர், தனது கற்கையைத் துறந்து தன்னை ஈழ விடுதலை போராளியாக இணைத்துக்கொண்ட இவரின் மரணத்தை நாங்கள் ஆழ்மன அஞ்சலியுடன் பதிவு செய்கின்றேன்.

இதேவேளை 41 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த மிகப்பெரிய இனப் படுகொலையாகக் கறுப்பு ஜூலை உள்ளது. தமிழர்கள் மீது இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆசீர்வாதத்துடன் சிங்கள இளைஞர்களும், சிங்கள காடையர்களும் இந்த கொலைகளில் ஈடுபட்டனர். வெலிக்கடை சிறைச்சாலையில் இரண்டு நாட்கள் தொடர்ந்து மனித பேரவலம் நடந்தது. அங்கு தம்பாபிள்ளையும் இருந்தார் என்றார்.

# கலை நிகழ்வுகள்...

எம்.எப்.றிபாஸ்

கிழக்கின் அகல் இளையோர் மற்றும் விழுது நிறுவனம் இணைந்து நடத்தும் ஓரங்கட்டப்பட்ட கலைஞர்களை வெளிக்கொணர்வதற்கான கலை நிகழ்வும், உரையாடல்களும் மட்டக்களப்பில் செவ்வாய்க்கிழமை (23) நடைபெற்றது.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்தில் விழுது நிகழ்ச்சி திட்ட அதிகாரி இந்துமதி ஹரிகரதா மோதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம், பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விழுது அமைப்பின் சிரேஷ்ட உத்தியோகத்தர் பாலசிங்கம் முரளிதரனின் வரவேற்புடன் ஆரம்பமான இவ்நிகழ்ச்சியில் கிழக்கின் அகல் இளைஞர் குழுவினரின் இரு தசாப்த கால பயணம், மறுமலர்ச்சி நாட்டுக்கூத்து படைப்பு, ஓரங்கட்டப்பட்டு மருவிவரும் கலைஞர்களின் சவால்களும் சமூகத்தில் அவர்களுக்கான அங்கீகாரங்களும் என்னும் தலைப்புக்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் நாட்டார் பாடல்கள், பாறை இசை, ஆதிவாசிகளின் பாரம்பரிய கலை படைப்புக்களும் நடைபெற்றது













# தேநீர் கடையில் கசிப்பு

கண்டி மத்திய சந்தையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தேநீர் மற்றும் குளிர்பானம் விற்பனை செய்கின்ற போர்வையில், கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஹோட்டல் உரிமையாளர் மற்றும் ஊழியர் ஒருவரை 8 கசிப்பு போத்தல்களுடன் திங்கட்கிழமை (22) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகம் ஏற்படாத வகையில், குளிர்ப்பான போத்தல்களில் கசிப்புவினை பொதி செய்து வைத்துள்ளதாகவும் ஹோட்டல் கவுண்டரில் பணம் செலுத்திய பின்னர், ஊழியர்களால் தேநீர் கோப்பையில் கசிப்பை ஊற்றி கொடுப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சந்தையில் வேலை செய்யும் நாட்டாமிகள், கடைகளில் வேலை செய்யும் ஊழியர்கள் ஆகியோர் தினசரி வாடிக்கையாளர்கள் எனவும் இந்த வியாபாரம் அதிகாலை 5.00 மணி முதல் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், ஹோட்டலின் உரிமையாளர் அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவரது ஊழியர் முன்னாள் இராணுவ வீரர் எனவும் இவர்கள் நீண்டகாலமாக இந்த மோசடியில் ஈடுபட்டு வந்தவர்கள் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# போதையில் வந்தவருக்கு விளக்கமறியல்



எம்.றொசாந்த்

வழக்கு விசாரணைக்காக மதுபோதையில் வந்த நபரை விளக்ளமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வரும் குடும்ப வன்முறை தொடர்பான வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றுக்கு மதுபோதையில் வந்துள்ளார்.

அந்நபரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்திய போது 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# 15 வயது மாணவியை வன்புணர்ந்த காதலன்

புத்தள பிரதேசத்தில் 15 வயதுடைய மாணவியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவரது காதலன் செவ்வாய்க்கிழமை (23) கைது செய்யப்பட்டுள்ளார்.

11ஆம் வகுப்பில் கல்வி கற்கும் குறித்த மாணவியின் தாய், புத்தள-கட்டுகஹகல்கே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று தனது மகளை அவருக்குத் திருமணம் செய்து வைக்க முன்வந்துள்ளார்.

அப்போது, இளைஞரின் பெற்றோரும் அதற்கு சம்மதித்து, மாணவியை அவரது படிப்பு முடித்து உரிய வயது வரும் வரை காத்திருக்குமாறு கூறியுள்ளனர்.

இந்நிலையில், குறித்த இளைஞனுக்கும், மாணவிக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளதுடன், இருவரும் இவர்களுடைய வீடுகளுக்குச் செல்வது வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி குறித்த மாணவி வழக்கம் போல் அந்த இளைஞனின் வீட்டிற்குச் சென்றுள்ளார். அதன்போது இளைஞன் மாணவியை




அறைக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதுடன், அதற்குப் பின்னரும் இருவரும் பல தடவைகள் இவ்வாறு நடந்து கொண்டுள்ளனர்.

பின்னர் அந்த இளைஞன் மாணவியை விட்டு விலகிய நிலையில், இது தொடர்பில் குறித்த மாணவி, தனது தாயுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கமைய புத்தள பொலிஸாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மாணவி மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபரை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புத்தள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கு ஆசிரிய உதவியாளர்களுக்கு நற்செய்தி

கிழக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களை, ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சி எம்.பி. ரோஹிணி குமாரி கவி ரத்ன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கில் கணிதம் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளும் வகையில் தகைமையுடைய ஆசிரிய உதவியாளர்கள் அதற்காக 2014ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆசிரிய பயிற்சிகளை கோரியுள்ளபோதும், அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு சென்றால் வகுப்பறைகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமற் போவர் என்பதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அந்த வகையில், 2014ஆம் ஆண்டு அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள். கடந்த 10 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இதுவரை அவர்கள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படவில்லை.

தற்போது மத்திய மாகாணத்தில் இவ்வாறு ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களும் அவ்வாறு தம்மை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

அவர்கள் தொடர்பில் கல்வியமைச்சு எத்தகைய நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த போது, தற்போது கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அவர்கள் கல்வியமைச்சுக்கு அது தொடர்பில் கோரிக்கை விடுத்தால், ஆசிரியர் சேவை யாப்பை ஆராய்ந்து, அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.



## நீராவியடி பிள்ளையார்
# ஆலய பூசகருக்கு அச்சுறுத்தல்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு-பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் புதன்கிழமை (24) இடம்பெறவுள்ள நிலையில், பூசகர் உள்ளிட பக்தர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை(23) அன்று கோவிலுக்கு பொலிஸ், இராணுவம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினரால் கோவில் பணிக்காக வருகை தந்த பூசாரி உள்ளிட்டவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஆலய பூசகர் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கையில்,

"நாங்கள் பொங்கல் வழிபாடுகளை செய்துக்கொண்டிருந்த வேளையில் பொலிஸ், இராணுவம் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் விசாரனைகள் நடத்தினர்.

அது தொடர்பாக கேட்டபோது, நாங்கள் சிவன் சிலை பிரதிஷ்டை செய்வதாகவும் அது பல கோடி பெறுமதி எனவும் ஒரு வதந்தி கதையைப் பரப்பியுள்ளார்கள்.

இந்த வதந்தி பரப்பியவர்களை நாம் எப்படிச் சொல்வதென்று




தெரியவில்லை, நாங்கள் அப்படியான நிலையில் ஆலயத்தை வழிநடத்தவில்லை, எங்களுடைய மூல மூர்த்தியாக இருக்கும் விநாயகப்பெருமானை நாங்கள் மென்மேலும் வழிபட்டு வருகின்றோம். அவருடைய அருள் இருக்குமென்பதை சகல மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

எந்தவொரு சிலை பிரதிஷ்டை செய்வது வேறு எந்த விதமான நிலைமையும் நடைபெறமாட்டாது. தயவுசெய்து இவ்வதந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்பதை ஆலய பூசகர் என்ற வகையில் தெரியப்படுத்த விரும்புகின்றேன்" என்றார்

அத்துடன், செவ்வாய்க்கிழமை (24) அன்று பொங்கல் உற்சவம் சிறப்பாக இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் தென்பகுதியைச் சேர்ந்த பலர் முகநூலில் வதந்தி பரப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருக்கல்யாணம்

வெள்ளவத்தை - மயூரா பிளேஸ், மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (27) மாலை 4 மணி முதல் 7 மணி வரை ஸ்ரீயபதி பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்கு திருக்கல்யாண மஹோத்சவம் நடைபெறும். ஹைதராபாத் ரெகோன் சர்வதேச அமைப்பு ஏற்பாட்டில் இலங்கை ஸ்ரீகிருஷ்ணாகழகம் நடத்தும் இவ்விழாவுக்கு இந்தியாவிலிருந்து பூசகர்களும் வருகை தரவுள்ளனர்.

சனிக்கிழமை (27) காலை 7.30 முதல் கோபூஜை புன்யாகவசனம், சாந்தி ஹோமம், மஹாபூர்னாஹுதி நடைபெற்று மதியம் 12 மணி வரை கலை நிகழ்ச்சிகள்



இடம்பெறும். நண்பகல் 12 மணி முதல் அன்னதானம் வழங்கப்படும். மாலை 4 மணி முதல் 7 மணிவரை ஸ்ரீநிவாசக் கல்யாணம் நடைபெறும்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர் :** ரோச் ப்ரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர் :** ஆர் டீ எக்ஸ் ஸ்மார்ட் எனர்ஜி (பீவீஇ) எல்டீடி

**பதிவு அலுவலக முகவரி :** இல. 332, காலி வீதி, கொழும்பு 04.

**கம்பனியின் இலக்கம் :** பீவீ 6006

**மாற்றம் நிகழ்ந்த திகதி :** 17.07.2024

**டைரக்டர்**
**எம் என் எஸ் (அசைன்மன்ட்ஸ்) (பிரைவட்) லிமிடட்**
**கம்பனியின் செயலாளர்கள்.**

# மன்னிப்புக் கேட்டால் மட்டும் எல்லாம் சரியாகிவிடுமா?

கொவிட் தொற்றுப் பரவலில் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்யும் முறைமைக்குப் பதிலாக, எரித்துவிட வேண்டும் எனும் முறைமையை அக்காலத்தில் ஆட்சியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பின்பற்றியிருந்தது.

முஸ்லிம்களின் நம்பிக்கையையும் மீறி, அவர்களின் உரிமைகளைப் பறித்து, கொவிட் தொற்றினால் உயிரிழந்த சுமார் 276 பேரின் உடல்கள் இவ்வாறு தீயில் எரிக்கப்பட்டன. இதற்கு அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார, மருத்துவ பரிந்துரைகள் அடங்கிய வழிகாட்டுதல்களை அரசாங்கம் காரணம் காண்பித்திருந்தது. புதைக்கப்படும் உடல்களிலிருந்து கொவிட் வைரஸ் வெளியேறி, நீரோடைகள், நீரூற்றுகளில் கலந்து, அதனால் தொற்று மேலும் பரவும் எனவும் காரணம் கூறப்பட்டிருந்தது.

2021 ஜூலை மாதம் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆதரவில், அக்காலத்தில் பொறுப்பில் இருந்த நீர் வழங்கல் அமைச்சினால், கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் நீரோடைகளில் கொவிட்-19 பரப்பும் கொரோனா வைரஸ் தொற்று காணப்படுகின்றதா என்பது தொடர்பான பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆற்று நீர், மருத்துவமனைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் மற்றும் இதர தொற்றுப் பரவலுக்கு ஏதுவான பகுதிகள் போன்றவற்றின் மேற்பரப்பில் இந்த கொரோனா வைரஸ் இல்லை என்பது இந்த பரிசோதனையின் போது தெரியவந்தது.

இந்நிலையில், குறித்தவொரு சமூகத்தைப் பழிவாங்கும் அடிப்படையில் இவ்வாறானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவிய நிலையில், தற்போது அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நெருங்கி வரும் காலப்பகுதியில், காலம் கடந்த ஞானம் பிறந்துள்ளதைப் போன்று, இவ்வாறானதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளமை, இதுவும் தேர்தலில் வாக்குகளைத் தேடும் ஒரு பிரச்சார நடவடிக்கை தானா என சிந்திக்க வைத்துள்ளது. அத்துடன், ஒரு இனத்தின், மதத்தின் நம்பிக்கையை மீறி, உயிரிழந்த உடல்களைத் தகனம் செய்வது என்பது, அந்த மதத்தின் கொள்கைகளை நிந்தித்து அவமதிக்கும் செயலாகும். நாட்டில் பெரும்பான்மையினர் பின்பற்றும் பௌத்த மதம் சார்ந்த ஏதேனும் கொள்கை இவ்வாறு மீறப்பட்டு, இது போன்றதொரு அசாதாரணமான தீர்மானம் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தால், வெறுமனே மன்னிப்புக் கேட்டுவிட்டு எல்லாம் முடிந்தது என்று சென்றுவிடுவார்களா? இதற்குப் பொறுப்பாக இருந்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்குவது? இந்தத் தீர்மானமும் ஒரு மதத்தை அவமதிக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

பெரும்பான்மையினருக்கு ஒரு நீதி, ஏனையவர்களுக்கு ஒரு நீதியா? ஒரு நாடு, ஒரு சட்டம் என்பது இங்குப் பொருந்தாதா? பொறுமைக்கும் எல்லை உண்டு. தவறு செய்வது மனித இயல்பு, அந்தத் தவறை உணர்ந்து தம்மைத் திருத்திக் கொள்வது அதே மனிதனின் உயர்ந்த பண்பு. மன்னிப்புக் கேட்பது அதற்கும் மேலான செயல். பாதிக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மன்னிப்புக் கோரலை ஏற்று, மன்னிப்பார்களா?

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




முருகானந்தம் தவம்

# நீதிக்கு வாய்ப்பில்லை

1983 ஜூலை 23ஆம் திகதி பேரினவாத ஆட்சியாளர்களினால் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட 'கறுப்பு ஜூலை' இனக் கலவரத்துக்கு 41 வருடங்களுக்குப் பின்னர் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். இலங்கையின் நீதியமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஷ. பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த பகிரங்க மன்னிப்பைக் கோரியுள்ளார்.

1983 ஜூலை 23ஆம் திகதி இலங்கைக்கு கரும் புள்ளியாகக் காணப்படுகிறது. 41 வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கு நேர்ந்த சம்பவங்கள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தின. அக்காலப்பகுதியில் நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை.
இருப்பினும் நாட்டுப் பிரஜை என்ற ரீதியில் 41 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலை சம்பவத்துக்குத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன் என சபையில் பகிரங்கமாகக் கூறி மனம் வருந்தியுள்ளார்.

இலங்கை வரலாற்றிலும் இலங்கைத் தமிழர் வரலாற்றிலும் 1983 ஜூலை 23ஆம் திகதி ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய நாள். தமிழர்களை அழித்தொழிக்கும் அரச பயங்கரவாதத்தை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட நாள்.
1983 ஜூலையில் நடந்தது வெறும் கலவரம் அன்று. அது உள்நாட்டுப் போரின் தொடக்கம். சிங்களம்-தமிழ் என்ற இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ்வதில் முடிவு ஏற்பட்ட நாள் அந்த அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்ட நாளைத்தான் இன்றுவரை 'கறுப்பு ஜூலை' என்று தமிழர்கள் தமது வரலாற்றில் பதிவிட்டுள்ளனர்.

இலங்கையின் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டில் சிங்களவர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழ்ந்த பகுதிகள் எங்கும் ஓடிய தமிழர்களின் குருதியும் கொடூரமாகக் கொல்லப்பட்ட உயிர்களும் இதயங்களை உறைய வைத்த கதறலும், கண்ணீரும் காடைக் கும்பல்களால் கூட்டாக வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட தமிழ் பெண்களின் அபயக் குரல்களும் இலங்கை தலைநகரத்தின் வீதிகளை நிறைத்த அந்த நாளை எப்படி மறக்க முடியும்?

கறுப்பு ஜூலை என வர்ணிக்கப்படும் அந்த தமிழினப் படுகொலை நடந்து கடந்த 23ஆம் திகதியுடன் 41 ஆண்டுகள். ஆனாலும், இன்றுவரை அந்தக்கொடூர நாட்களை (ஜூலை 23, 24, 25, 26ஆம் திகதிகள்) நினைத்தாலே உடல் நடுங்கும், உயிர் பதறும், உறக்கமே வராது. அந்தளவுக்குத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாகவும் அழியாத துயராகவும் கறுப்பு ஜூலை பதிந்து போயுள்ளது.

வாகனங்களில் சென்ற தமிழர்களை வழிமறித்து உயிரோடு எரித்துக் கொன்று நடனமாடிய சம்பவங்கள், வாக்காளர் பட்டியலை வைத்துத் தமிழர்களை அடை யாளம் கண்டு வீடுகளிலிருந்து இழுத்தெடுத்து வெட்டித் துண்டாடிய காட்சிகள், பெற்றோருக்கு முன்பாக மகள்களும் கணவர்களுக்கு முன்பாக மனைவிகளும் சகோதரர்களுக்கு முன்பாக சகோதரிகளும் பிள்ளைகளுக்கு முன்பாக அன்னையர்களும் இக்காடைக் கும்பல்களினால் நிர்வாணமாக்கப்பட்ட, கூட்டாக வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட கொடூரங்களும் கடைகளில் தமிழனின் கறி கிடைக்கும் என பலகையில் எழுதி வைத்து எக்காளமிட்ட கோரங்களும் தமிழர் மனங்களிலிருந்து எப்படி மறைந்து போகும்?

ஜனநாயகத்தின் அடிப்படையில் இனங்களுக்கிடையில் வேறுபாட்டை நோக்காத நேர்மையான சிங்களவர்களின் மனசாட்சிகளை இருளாக்கிய அந்த 'ஜூலை கலவரம்' எனப்படும் தமிழினப் படுகொலையே 30 வருட யுத்தத்துக்கு வழிகோலி இலட்சக்கணக்கான உயிர்களை பலியெடுத்ததுடன், உடைமைகளை அழித்து இலட்சக்கணக்கான தமிழர்களை அகதிகளாக்கி, சிங்களவர்-தமிழர்களை இன்றுவரை எதிரிகளாகவும் இணக்கப்பாட்டுக்கு வர முடியாதவர்களாகவும் வைத்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்ற இந்த சிங்களவர்களின் கடைகெட்ட காடைத்தனம் தேசிய அடக்குமுறையினது உச்சக்கட்டம். 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம்-திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகத் தலைநகர் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இந்த தமிழினப் படுகொலை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது.

திட்டமிட்ட இனக் கலவரம் முதலில் கொழும்பை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் அதன் பின்னர் ஏனைய நகரங்கள், மத்திய மலைநாட்டுப் பகுதியில் என தொடர்ந்து ஏழு நாட்களாக இடம்பெற்றன. அது மட்டுமன்றி, கொழும்பு - வெலிகடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்ட 53 தமிழர்கள் பொலிஸார், சிறைக்காவலர்களின் ஒத்துழைப்புடன் சிங்களக் கைதிகள், காடையர்களினால் கண்கள் தோண்டப்பட்டும் கொடூர சித்திரவதைகள் செய்யப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த தமிழினப் படுகொலையால் தலைநகரில் உள்ள பாடசாலைகள், கோவில்கள் தமிழ் அகதிகளால் நிரம்பி வழிந்தன. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கப்பலேற்றப்பட்டு "உங்கள் நாட்டுக்கு செல்லுங்கள்" என கூறி ஆட்சியாளர்களால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். இந்நிலையில், பெரும்பாலான தமிழர்கள் நாட்டை விட்டும் வெளியேறினர்.

தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட சிங்களக் காடைக்கூட்டத்துக்கு சட்ட ரீதியான முகமூடியையும் இராணுவ-பொலிஸ் ஒத்துழைப்பையும் வழங்கும் பொருட்டு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி, கொலை செய்யப்பட்டவர்களை மரண விசாரணையோ அல்லது நீதி விசாரணையோ இல்லாமல் தகனம் செய்ய பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. தமிழினப் படுகொலைகளைத் தலைநகரில் ஆரம்பிப்பதற்கென முன்கூட்டியே தயார்செய்யப்பட்டது. இதற்காகவே யாழ் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் கொழும்பு கனத்தையில் தகனம் செய்யப்படுமென அரசு அறிவித்தது. அது சிங்களக் காடையர்கள் தமிழினப் படுகொலைக்காக அணித் திரள விடுக்கப்பட்ட அரசின் ஒரு உத்தியோகபூர்வ அழைப்பாகவே இருந்தது.

ஜூலை 23ஆம் திகதியில் இருந்து காடையர் கும்பல்களும் அவர்களுடன் இணைந்து தமிழினப் படுகொலைகளில் ஈடுபட்ட பொலிஸாரும் இராணுவமும் ஒன்றரை நாட்கள் சுதந்திரமாகத் தமிழர்களைத் தேடித் தேடிக் கொல்லவும் தமிழ் பெண்களை பாலியல் வல்லுறவுகள் செய்யவும், தமிழர் சொத்துக்களை அடியோடு அழிக்கவும் இடமளித்ததன் பின்னர், ஜூலை 25ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கே ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொழும்பில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தார். ஏனைய மாவட்டங்களுக்கும் செல்லுபடியான விதத்தில் அன்று மாலை 6 மணிக்கே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அதனையும் மீறி ஜூலை 26ஆம் திகதி கண்டி, நுவரேலியா, திருகோணமலை, குருநாகல், இரத்தினபுரி, பலாங்கொடை முதலான பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக தமது காடைத் தனங்களை அரங்கேற்றினர்.

இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும், இராணுவத்தினர் உயிரிழந்தமைக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவம், பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களுக்கு அளிக்கப்பட வில்லை. அந்த சம்பவங்கள் பற்றிய தகவல்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தன. அப்போது கொழும்பில் இருந்த வெளிநாட்டு செய்தியாளர்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களுடைய ஹோட்டல் அறைகளில் இருந்து வெளியில் வருவதற்கும் சில நாட்கள் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்ட வெளிநாட்டுச் செய்தியாளர்கள் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஜூலை 23இல் ஆரம்பித்த தமிழினப்படுகொலை மாதத்தின் இறுதி வரை நீண்டு சென்றது. 83 கலவரம் என்ற பெயரில் நடந்த தமிழினப் படுகொலையில் 3,000 பேர் வரையானோர் உயிரிழந்திருக்கக் கூடும் எனவும் பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழர்களின் வாழ்விடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன எனவும் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன எனவும் தரவுகள் கூறுகின்றன. தமிழர்களை அழிக்க வெறியோடு ஒரு கூட்டம் விரட்டினாலும், அதே சிங்கள இனத்தைச் சார்ந்த மனிதாபிமானம் உள்ளவர்களினால் துணிவோடு பல தமிழர்கள் காப்பாற்றப்பட்டமையும் பல சிங்களக் குடும்பங்கள் தமது வீடுகளில் தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியமையும் இன்றும் தமிழர்களால் நன்றியுடன் நோக்கப்படுகின்றது.

இந்த 1983 ஜூலை கலவரம் என்ற பெயரில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலையே பல வரலாறுகளை எழுதியது. பல வரலாறுகளை மாற்றியது. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் விடுதலைப்புலிகள் தலைமையில் தீவிரம் அடைவதற்கு ஜூலை கலவரம் பிரதான காரணமாக அமைந்தது. தமிழர்கள், பெரும்பான்மையினருமான சிங்களவர்கள் மேல், சிங்கள ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கையிழந்து சந்தேகம் கொள்ள வைத்தது. இந்த நாட்டிலே சிங்களவர்-தமிழர்கள் ஒன்றாக இணைந்து வாழ முடியாது என்கின்ற நிலைமையை ஜூலை கலவரம் ஏற்படுத்தியது.
1983 ஜூலையில் நடந்தது வெறும் கலவரம் அன்று. அது உள்நாட்டுப் போரின் தொடக்கம். சிங்களம் -தமிழ் என்ற இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ்வதில் எற்பட்டுவிட்ட முடிவு. அந்த நிலைதான் இன்றுவரை தொடர்கின்றது.

41 வருடங்களுக்கு முன்னர் அப்போதைய அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினப் படுகொலைக்கு இதுவரை நீதி கிடைக்காதது போலவே இலங்கையின் தேசியப் பிரச்சினையாக மாறிய தமிழ்மக்களின் பிரச்சினைக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை. கிடைக்கும் வாய்ப்புக்களும் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

இடி, மின்னலுடன் பெருமழை பெய்தால், அது நிரந்தரமாகப் பெய்துவிடுமோ என்று மக்கள் பயப்படுவது வழக்கம். அது நிலையற்ற மாற்றம் என்பதை எவர்தான் உணர்கின்றார்கள்.

துன்பங்கள் வந்தால், அது மாறாது எனத் தீர்மானமாக எண்ணிவிடுகின்றார்கள். வாழ்க்கைகூட வானிலை மாற்றம் போன்றதுதான். திடீர் என மழை வரும், புயல் வரும் அப்புறம் கடும் வெயிலும் அனலாய்க் கொதிக்கும்.

அந்தந்தச் சூழ்நிலை எதுவோ, அதற்கு மாறாக மனிதர்கள் பேசி விடுகின்றார்கள். மாற்றங்கள் பொதுவானவை என இன்னமும் புரிந்து கொள்ளாதது போல் வாழ்வது, வேடிக்கையாகத் தோன்றுகின்றது.

எந்த நிலையையும் ஏற்றுக் கொண்டு, தளர்வு இல்லாத நிலையில் வாழப்பழக வேண்டும். இயற்கை எமக்கு எதிரி அல்ல, அதைத் திட்டுவது அநீதி. காலமாற்றம் எல்லாமே மக்களின் நலனுக்காகவே உருவானவை.

நல்லவைகளைக் கெட்டவைகள் எனக் கருதலாகாது. மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமாயின், எல்லா அனுபவங்களையும் ஏற்று ரசிக்க வேண்டும். இன்பத்தை ரசிப்போர், துன்பத்தையும் எதிர்கொள்ள வேண்டும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அம்பியூலன்ஸ் பணியில் ஈடுபடுத்துங்கள்

கிளிநொச்சி-வன்னேரிக்குளம் வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் வண்டியினை பணியில் ஈடுபடுத்துவதற்குக் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னேரிக்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் இருந்து வைத்தியர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் அல்லது இரு நாட்கள் வந்து செல்வது உண்டு.

வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் 50 வரையான முதியவர்கள் உள்ளனர். இவர்களின் அவசர வைத்திய சேவைக்கு அக்கராயன் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி இருப்பதனால் வன்னேரிக்குளம் வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் வண்டியினை தொடர் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் வன்னேரிக்குளம், வன்னேரிக்குளம் பொது மக்கள் பிராந்திய சுகாதார பணிப்பாளரிடம் தமது கோரிக்கையினை தெரிவித்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



# பால்நிலை ரீதியாக நூல் விமர்சனம்



திருச்செல்வம் ஜனனீ,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(புதன்கிழமை தொடர்ச்சி...)

இதனால்தான் விவாகரத்து திருமணத்திற்குப் பின்னால் தொடர்பு, பாலியல் தொந்தரவுகள் என்பன சமூகத்தில் ஏற்படுகின்றன. கலவையில் ஆண் இயங்குபவனாகவும் பெண் இயங்காவிட்டாலும் சும்மா இருந்தால் போதும் என்ற நிலைமைதான் நிலவுகின்றது. மேலும் அதனை ஒரு கேவலமான சூழலாகச் சித்திரிக்கப்படுகின்றது. சில பெண்கள் இதைச் சாதகமாக்கிக்கொண்டு ஆணிடம் தனக்கான மற்றைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆயுதமாக்கிக் கொள்கின்றார்கள். ஆக, மொத்தத்தில் சிலபெண்கள் பாலியல் தொல்லைகளை அனுபவிக்கின்றார்கள் பெண்கள் சில வருடங்களுக்குப் பின் காமத்தில் நாட்டமின்மையான பிரச்சினைகளுக்குக் காரணம் பாலியல் கல்வியில் போதிய அறிவின்மையை ஆகும்.

6. கழிவறை இருக்கை பொதுவாக சமூகங்களில் பெண்களை விட ஆண்கள் உடலினால் வலிமையானவர்களிடம் கருத்து நிலவுகிறது. ஒரு பெண்ணால் ஒரு ஆணுக்கு வன்முறை செய்யமுடியாது. ஆனால், ஒரு ஆணுக்கு இது முடியும். இது வன்புணர்வுக்கு ஓர் அடிப்படை காரணமாய் அமைகிறது பெருவாரியான ஆண்களுக்குப் பெண்ணின் கழிவறை இருக்கைகளாகவே சொல்லப்படுகின்றது அவளை ஒரு குப்பையாக நினைக்கின்றனர். இங்கு பால்நிலை சார்ந்த ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. பெண்களை காமப் பொருளாக எண்ணுவது அவளைப் புண்படுத்துவதும் பாலின சம மற்ற தன்மையை ஏற்படுத்துகின்றது.

கழிவறை இருக்கை உடலுறவுகளில் ஆண்கள் உடலால் பலம் மிகுந்தவனாக இருக்கின்றான். ஒரு பெண் விரும்பினாலும் ஒரு ஆணை வன்புணர்வு செய்ய இயலாது. குழந்தையானது பெற்றோரை விட வலுமிகுந்ததாக வரப்போகின்றோம் என்ற நம்பிக்கை இருக்கும் ஆனால் ஒரு பெண்ணிற்கு அந்த நம்பிக்கை இல்லை விரும்பியோ விரும்பாமலோதன் உடலை ஆண் தேவைக்கு உபயோகிக்க அனுமதித்து வாழும் பெண்களே அதிகம்.பெருவாரியான ஆண்கள் படுக்கையில் பெண் என்பவன் தன்னைப் போல் நடந்து கொள்கிறார்கள். நம் சமூகத்தில் ஓர் ஆண் எப்படி இருந்தாலும் ஒரு பெண் அவனை அப்படியே ஏற்றுக் கொண்டுவாழவேண்டும் என்ற நிபந்தனை காலகாலமாக உள்ளது. மற்றும் சமூகத்தில் பெண் ஆணிற்காகக் குழந்தை பெறுவதற்கு மாத்திரம் கலவி என்பது ஈடுபடுகின்றாள்.

பெண்களுக்கான எதுவும் இல்லை பெண்ணே ஒரு சக மனுசியாக மதிக்கும் தன்மை இல்லாமல் அவளை ஒரு போகப் பொருளாக மட்டுமே ஆக்கிவைத்திருக்கிறது.ஒரு பெண் உடலுறவில் நாட்டம் இல்லையென்றாலும் ஆனால், அவளது அனுமதியின்றி அவளைக் காம தேவைக்குப் பயன்படுத்தும் போது கணவன் தான் என்று இந்த உலகம் அவனைக்குறை சொல்லாது. பொதுவாகப் பெண்களிடம் ஒன்றைக் காணமுடிகிறது அவர்களால் ஒரு ஆணின் மீது அன்பு வைத்திருந்தாள் அவனை அருகாமை அவளுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவள் உடலுறவில் திருத்திக்கொள்ளவில்லை என்றால் அதனை சொல்லத் தயங்கும் தன்மைகொண்டவள். நிறைவு அடையாத உடலுறவைக் குறித்து எந்த பெண்ணாவது பேசினால் பெண்களுக்கு இதெல்லாம் முக்கியமே இல்லை ஆணுக்கு மட்டுமே காமம் என்பது முக்கியம் பெண்ணுக்குப் பிள்ளை வளர்ப்பு, கணவனின் திருப்தி இவைதான் முக்கியம் என அடித்துக் கூறப்படுகிறது.

பெண்கள் உச்சம் வராமலேயே உச்சமடைந்து விட்டது போல் நடிக்கிறார்கள். காமத்தை பொறுத்தவரையில் தனது விருப்பு வெறுப்பை மறைத்தே வாழ கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் அப்படிக் கூறினால், தமது இணையோர் தங்களை விட்டு வேறு உறவினை தேடிக்கொண்டு விடுவார்கள் என்று அச்சப்படுகிறார்கள். பெண்கள் உச்சம் பெற்றதாக நடிப்பதும் ஆண் அறியாதது போல் நடிப்பதும் பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் இருவரிடையான வசதியான பரஸ்பர பழக்கமாக இருக்கலாம். விறைத்த ஆண் குறியும் விறைத்த யோனியும் அவர்களுடைய உண்மையான நெருக்கத்தைத் தெரியப்படுத்தும். இவை (இரண்டையும் மனத்தினாலும் ஆர்வத்தில் உண்மை அளவீடாகக் கூறுகின்றார்.

7. காமத்தைத் தவறெனக் கருதுவதால் ஏற்படும் விளைவுகள் இருபாலருக்கும் இடையிலான காதல் திருமணம் என்றுகருதப்படுகின்றது உறவுகளின் உடற் கவர்ச்சியே காதல் என்று கருதப்படுகின்றதே இது காதலின் அர்த்தத்தைக் கேவலப்படுத்தி விடுகிறது. ஆணானவன் பெண்களோடு பேசும் போது அவள் கண்களை நேருக்கு நேர் பார்ப்பதே இல்லை அவர்களுடைய பார்வையானது பெண்களின் மார்பகத்தை நோக்கியே நிலைத்து நிற்கின்றது. இது சங்கடத்தை ஏற்படுத்துவதாக உள்ளது இத்தகைய ஆண்களிடம் பெண்கள் பேசுவதற்கு அஞ்சுகிறார்கள். பெண்கள் வன்முறைக்கு



எழுத்தாசிரியர் : லதா (Writer)

ஆளானால், அவள் அரைகுறையான ஆடையுடன் இருந்ததாலும் இவ்வாறு நடந்தது தகாத வேளையில் வெளியில் வந்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. ஆண்கள் சன நெரிசல்களில் பெண்களை அங்கங்களைத் தொடும் போது அவர்கள் பேசும் வரை அவர்களை விடுவதே இல்லை.

8.காதலின் வெளிப்பாடாகக் காமம் பாலியல் ரீதியான உணர்வுகள் இயற்கையானது என்பதைக் குழந்தைகளுக்குப் புரியவைத்து, அவர்களுக்குத் தைரியமும் தன்னம்பிக்கையும் கொடுத்தால், அவர்கள் உங்களிடம் எல்லாவற்றையும் பேச முன்வருவார்கள். மற்றவர்களோடு காதலில் ஈடுபடும் போது, அவரது உணர்வுகள் இயல்பாகவே உடல் சார்ந்த இன்பத்தில் உச்சத்தை அடைகிறது. உண்மையான அன்பு காமத்தையும் கடந்து நிற்கும். தன்னுடன் படிக்கும் தோழி மீதோ தோழன் மீதோ நம் குழந்தைக்கு ஈர்ப்பு ஏற்பட்டால் அதைப் பெற்றோர் பயமுறுத்தாமல் அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும்.

பாலியல் குறித்த விடயங்கள் வெளிப்படையான உரையாடலாக இருக்க வேண்டும். பள்ளிப் பருவத்தை முடிக்கும் முன் அவர்களை சுய சார்பு சிந்தனை உள்ளவனாக வளர்க்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் மற்றவர்கள் முன் நம் குழந்தைகளைக் கூனிக் குறுகி செல்லும் நிலைக்கு ஆளாக்கக்கூடாது. இதில் பெற்றோர் மீதுள்ள நம்பிக்கை மட்டுமல்ல, எதிர் பாலினத்தவரின் மீதுள்ள நம்பிக்கையும் இல்லாமலே போகும்.

ஆண் மேல் பெண்ணுக்கும், பெண் மேல் ஆணுக்கும் ஈர்ப்பு வருவது இயற்கை. அன்பின் மிகுதி தானே காதல். கோயில்களில் வடிக்கப்பட்டிருக்கும் சிற்பங்களும் இதைத்தானே சொல்கிறது. அப்படியிருக்கப் பெற்றோர் ஏன் குழந்தைகளிடம் இதைப் பேசத் தயங்குகிறார்கள் படித்து முடித்ததுமே அவர்களைத் திருமணத்திற்குள் தள்ளாமல் இந்த உலகத்தை உணர இடைவெளி கொடுக்க வேண்டும். வாழ்வியலை வீட்டிலிருந்து தான் குழந்தைகள் கற்றுக்கொள்ள முடியும். அன்பும் மரியாதையையும் எப்போது இயல்பான குணங்களாகப் புழங்கும் ஓரிடத்தில் வளர்க்கப்பட்ட ஆணும் பெண்ணும் காமத்தைக் காதல் வெளிப்பாடாகவே பார்ப்பார்.

9.திருமணம் தாண்டிய உறவுகள் காதலும் கலவி குறித்துமான தனது தேவை என்ன, ஆசை என்ன, எதிர்பார்ப்பு என்ன, விருப்புவெறுப்பு என்னவென்று ஒரு பெண்ணை பேச முற்படுத்துவதும்.. அதை அறிய முற்படுவதும். அறிந்து கொண்டவாறு அவ்வழியே கலவிப் பயணத்தை இருதரப்புமாக இணைந்து இசைதலிலான தாம்பத்தியத்தின் தலையாய கடமைகளில் ஒரு ஆணின் பங்கென்ன என்பதனை முன்னிறுத்திய விதத்தில், உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்று உரக்கப் பேசியிருக்கிறது. இணையர் ஒருவருக்கொருவர் மற்றவர்களுடைய கலவி குறித்தான தேவைகளையும் தேடல்களையும் உணர்வுகளையும் உளப்பூர்வமாக உணர்ந்து அதற்கு மதிப்பு கொடுத்து.

அவர்களையும் நெஞ்சார்ந்து உளப்பூர்வமாக அனுபவிக்கச் செய்து, தானும் அவ்வாறே உவகை கொள்ளும்படி விளக்கியுள்ளது. காதல் என்பது இயற்கையாகத் தோன்றும் உணர்வு, அது ஒருவரிடம் மட்டுமே ஏற்பட வேண்டும் என்ற எந்த கட்டாயமும் இல்லை. விடலை பருவ குழந்தைகளுக்கு பாலியல் குறித்தான தெளிவை வழங்குவது ஒவ்வொரு பெற்றோரின் கடமை ஆகும். அவை வீடுகளில் உரையாடலாக நால்வர் கூடுமிடத்தின் பேசுபொருளாக எதையும் மூடி மறைக்காமல் வெட்டவெளிச்சமாக்கி ஆழ்ந்த புரிதலை ஏற்படுத்த வேண்டியது நமது சமுதாய கடமையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

10. நம்பிக்கையை கடந்து ஆண்- பெண், கணவன் - மனைவி என்ற வரையறையை தாண்டி உளவியல் மற்றும் உடலியல் சார்ந்த தேடலும் ஆறுதலும்,மனிதனை முகமூடியுடன் திரியவைக்கும் குடும்ப அமைப்புகளும், வெளிச்சம் பாய்ச்சப்பட்டிருக்கின்றன. இங்கு ரகசியங்களே வாழ்வு வாழ்க்கையை நாம் அடுத்தவர் அபிமானத்திற்கே வாழப் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆண்-பெண் இருவரும் வெவ்வேறு வகையில் ஒருவரை ஒருவர் அடக்கவும் ஆக்கிரமிக்கவும் ஆவலும் காவலும் புரிகின்றோம். இந்தப் புத்தகம் ஆண்களின் வக்கிர வில்லத்தனத்தையும் பெண்களின் பிடிவாத பழைய கோட்பாடுகளையும் அலசிப்போடுகிறது. இந்த திருமணம் தாண்டிய உறவுகள் காதலற்ற மணவாழ்க்கை, திருப்தியற்ற தாம்பத்திய உறவு, புதிதாக எதையும் அறியும் ஆர்வம், வெளியோரிடம் ஏற்படும் உண்மையான காதல், அல்லது கவர்ச்சி மாற்றமில்லா நிலையில் ஏற்படும் சலிப்பு போன்ற காரணங்களால் ஏற்படும் இவை ஆண்களிடத்திலும், பெண்களிடத்திலும் ஏற்படலாம். இவற்றை எந்தப் பாலினம் மீது ஏற்படும் எனக் கூற முடியாது. திருமணம் தாண்டிய வெளி தொடர்புகள் பற்றிய ஆழ்ந்த புரிதலை ஒரு உரையாடல் மூலமாக எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

11. நட்பே அடித்தளமாக ஆண் பெண் இருபாலருக்கும் நட்பை அடித்தளமாகக் கொள்ளாத காதலானது எப்போது வேண்டுமென்றாலும் உடையலாம். மேலும், அனைத்து உறவுகளுக்கும் பாலமாக நட்பைக் கருதலாம். பெண்ணானவள் நட்பின் அழகே ஒரு நண்பரை தமக்கே உடையவராகச் சொந்தம் கொண்டாடமாட்டாள். அந்த நண்பனுக்கு வேறு நண்பர்கள் இருந்தாலும் நம் மீது அன்பு இல்லை என்று சிந்திக்கமாட்டோம் கவலைப்பட மாட்டாள். ஆனால், திருமணம் காதல் என்று கருதி விட்டால் மட்டும் ஏன் இத்தனை குழப்பங்களும் சந்தேகங்களும் எப்படியோ வருகின்றது அங்கு ஆணிடம் உரிமையை எடுத்துக் கொள்கின்றாள். நல்ல நட்பே காதலை வளம் பெற உதவும்

12.பரிதவிப்பு காம அலைச்சலானது அதிகரிப்பதால் ஒருவரது சுயமரியாதை கௌரவம் போன்றவற்றை இலக்க நேரிடலாம். இவ்வாறான சமூகத்தினரால் சிறியவர் முதல் பெரியவர்களுக்கு ஆண், பெண் இருபாலருக்கும் பாலியல் தொந்தரவுகளை அனுபவிக்கின்றவர்கள்.

இவ்வாறான தூண்டலை அதிகரிக்கச் செய்கின்றது. ஒரு வயதைத் தாண்டியவுடன் பெண்களை ஆண்களின் கண்ணில்படாமல் தனியான ஒரு கல்லூரியில் விடுகின்றார்கள் இரு பாலரையும் ஒருவருடன் ஒருவர் பழகிக் கலந்து கொள்வதாலே இப்படியான குழப்பமானநிலை. அடிப்படையை கற்காத பிள்ளை ஒரு நல்ல உணர்வுக்கான பலமான அடித்தளம் என்ன வென்று உணராத பிள்ளை என்று கூறுகின்றார். ஆண்களிலோ பெண்களிலோ சிலர் அவர்களுக்கு வேண்டியது என்ன மோகமமாகத்தான் இருந்தாலும் அதை அடைவதற்குக் காதல் அன்பு போன்ற வார்த்தைகளைப் போட்டு நிரப்புகிறார்கள். இயற்கை எல்லா உயிரினங்களையும் ஆண்- பெண் என்றே படைத்திருக்கின்றது அவர்கள் சேர்ந்தாலே வாழ்வு நிறைவு பெறுகின்றது வீடு, தொழில் அன்றாடவாழ்வில் இரு பாலினரும் இருக்கும் சேர்ந்தே செய்கின்றார்கள். ஆனால், நம் சமுதாயம் ஒழுக்கம், பாதுகாப்பு என்ற பெயரில் ஏனோ அவர்களைப் பிரித்து வைக்கும் முயற்சியை மேற்கொள்கின்றது.

13. சுய இன்பம் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமக்கான நேரத்தை ஒதுக்கி தன்னைப்பற்றி தனது உணர்வுகளைப் பற்றியும் தெளிவு கொண்டிருக்க வேண்டும். இவர்கள் சுய இன்பம் கொள்வதன் மூலம் காமத்தின் உச்சியை அடையலாம். சுய இன்பம் கொள்வதை அவமானமாகக் கருதாமல் அதுவும் இயற்கையான செயல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு நூலாசிரியர் பொதுவில் பெண்கள் உடலுறவின் போது பெரும்பாலான நேரங்களில் உச்சத்தை அடைவது சுய இன்பத்தின் மூலமே என எண்ணுகிறார்.

சுய இன்பம் அத்தியாயம் ஆசிரியர் கூற முற்படுவது சுய இன்பத்தைப் புறந்தள்ளாதே எனக்குப் பிடித்த ஒருவரிடம் நான் உறவு கொள்கின்றேன்.

இருபாலரையும் தனிமையில் இருக்கும் திறமைக்கு ஈடானதே எதுவுமே இல்லை காமத்தின் உச்சத்தினுடைய கற்றல் அவசியம் இது தவறு ஏதும் இல்லை. உண்மையில் இது சரியான செயல் ஒரு பதின்ம பருவ ஆணோ பெண்ணோ சுய இன்பம் கொள்வதன் மூலம் இன்பத்தைப் பெற்றால் அவர்கள் ஒத்த வயதினரோடு பாலுறவு கொண்டாக வேண்டும் என்ற எண்ணத்தைத் தள்ளிப் போடலாம். சுய இன்பத்தை முறையாக கற்ற இளைஞர்கள் தேவையான காலங்களில் சுய சார்புடையவரான கூடியவர்களாக மனப் பக்குவத்தைப் பெறுவார்கள் இது பற்றி மருத்துவர் கூறுகையில் ஆண்கள் அதிக சுய இன்பம் கொள்வதனால் ஆண்மையின்மை, காசநோய், தன்பாலியல் உறவைத்தூண்டும் ஆகியவை ஏற்படும் என சில நோயாளிகள் நம்புகிறார்கள் அது பொய்யாகும்


14. ஈர உரையாடல்கள் இணையம் மூலம் அல்லது தொலைபேசியில் உரையாடும் போது, அலைச்சலின் உச்சிக்கே போய் விடுகின்றார்கள் காமம் என்பது அன்பின் வெளிப்பாடாக மாத்திரம் பார்க்கப்படுவதில்லை. அதிகமான பணத்தை ஆண் தன்மையை அதிகம் அடைவதற்கும் பெண் மார்பகங்களைப் பெரிதாக்கவும் சிலிக்கானுக்காகவும் செலவழிக்கின்றார்கள் இன்னும் சிலவருடங்களில் வயதான பெண்கள் பெரிய மார்பகங்கள் உடனும் வயதான ஆண்கள் விறைத்த ஆண்குறிகளுடனும் இருந்தாலும் அவை எதற்காக என்பன மறந்தவைகளாகவே இருப்பர்.

தொடரும்...

# கண்ணுக்குத் தெரியா காற்றலை



– ஷெல்லிதாசன்



"அம்மா உங்கடை குடும்ப பதிவு அட்டையை தாங்கோ..." "இந்தாங்கோ ஜீ.எஸ். ஐயா..." தனக்கு முன்னால் அந்தரப்பட்டு கதிரையில் அமர்ந்திருந்த சிவரமணி அம்மாவிடமிருந்து குடும்ப அட்டையை பெற்றுக்கொண்ட கிராமசேவையாளர் சுந்தரமூர்த்தி ஒரு படிவத்தை எடுத்து விபரத்தைப் பார்த்து பதிந்து கொண்டிருந்தார்.

இருந்தாற்போல, ஒரு யோசனை வந்தவராய் "அம்மா உங்கடை கணவரின்ரை பெயர் சிவசுப்பிமணியந்தானே...", "ஓமையா... அவர் மோசம் போய் மூண்டு வருசமாச்சு", "அது சரி அவர் அரசாங்க உத்தியோகத்திலை இருந்தவரெல்லே... அவரின் பென்சன் வருமெல்லே", " ஓம் ஐயா... அது எங்கை ஐயா இப்பத்தைய சிலவுக்கு காணும்?"

"ஓம் அம்மா நீங்கள் சொல்லுறது சரிதான்... ஆனால், மன்னிச்சுக் கொள்ளுங்கோ அரச பென்சன் கிடைக்கிற குடும்பங்களுக்கு கொறணா வாழ்வாதார நிதி 5,000 கொடுக்க முடியாது. இது அரசாங்க உத்தரவு அதை மீறி என்னாலை ஒண்டும் செய்ய ஏலாதம்மா... இந்தாங்கோ குடும்ப பதிவு அட்டை...போட்டு வாங்கோ"

என்று சொன்ன சுந்தரமூர்ததி ஜீ.எஸ் சைப் பார்த்து, "ஐயா பென்சன் பேருக்குத்தான் வருகுதையா... மூத்தவளின்ரை கலியாணத்துக்கு வங்கியிலை ஐஞ்சு லச்சம் கடன் எடுத்தனான். அதுக்கு வெட்டி கையிலை மூவாயிரந்தான் கிடைக்குது. அதை வைச்சு எப்படி ஐயா காலந்தள்ளுறது. என்ரை ரண்டாவது மகன் இடைக்கிடை மேசன் வேலைக்குப் போனவன். அதுவும் இப்ப இந்த ஊருக்கு ஊர் தடையாலை எல்லாம் போச்சு. ஜீ.எஸ் ஐயா உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் எனக்கு நிவாரணம் கிடைக்க உதவி செய்யுங்கோ" என சிவரமணி அம்மா அழாத குறையாக கெஞ்சிக் கேட்க ஜீ.எஸ். எதற்கும் இணங்காதவராய் இருப்பதை அவதானித்த ரமணி அம்மா தனது கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை தனது சேலைத் தலைப்பால் துடைத்தபடி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

அன்று மாலை தனக்கு நிவாரண நிதி கிடைக்காத கவலையில் தனது வீட்டு முன் விறாந்தையில் கீழே குந்தியிருந்து யோசித்தபடியிருந்தாள் சிவரமணி அம்மா. திடீரென அவளது வீட்டின் முன்னால் ஒரு உந்துருளி வந்து நிற்பதைப் பார்த்து எழுந்து அவதானிக்கு முன்பாக வந்து நின்ற உந்துருளியிலிருநது இறங்கிய ஒரு இளைஞன் தூக்கமுடியாத ஒரு பெரும் பொதியை ரமணி அம்மா நிற்குமிடத்திற்கு கெண்டுவந்து வைத்துவிட்டு, "அம்மா இதெல்லாம் உங்களுக்குத்தான்... இதுக்குள்ளை அரிசி, பருப்பபு, சீனியெண்டு ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான சாமானுகள் இருக்கு. அதோடை இந்த ஐயாயிரம் ரூபாய் காசையும் வைச்சுக்கொள்ளுங்கோ" என சொன்ன இளைஞன் சிவரமணி அம்மாவிடம் ஐயாயிரம் ரூபாய் காசையும் கொடுத்தான்.

ரமணி அம்மாவுக்கு தான் ஏதொ கனவு காண்பது போல பிரமை ஏற்பட்டது. "தம்பி ஆரடா தம்பி நீ... உனக்கு அந்த கோணேசருடைய அருள் கிடைக்கவேணும்.... உதவி எண்டது தருணத்திலை செய்யிறது தான் தம்பி உதவி" என சொன்ன ரமணி அம்மா, தன் முன்னால் நின்ற இளைஞனைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டாள்.

"ஐயையோ என்னை ஏனம்மா கும்பிடிறியள்... இதையெல்லாம் ஒரு பெரியவர்தான் உங்களிட்டை குடுக்கச் சொன்னவர். அவருக்குத்தான் நீங்கள் நன்றி சொல்லவேணும்" என சொன்ன அந்ந இளைஞன் தான் ரமணி அம்மாவிடம் ஒப்படைத்த பொருட்கள் பணத்துடன ரமணி அம்மாவைச் சேர்த்து தான் கொண்டு வந்த கைத் தொலைபேசியில் இரண்டு மூன்று படங்களை எடுத்து பதிவு செய்துகொண்டு விடைபெற்றுச் சென்றான்.

அப்படி அகன்று சென்ற இளைஞன் தன்னிடம் பொருட்களை ஒப்படைக்கச் சொன்ன பெரியவரை அணுகி "இந்தாங்கோ ஐயா உங்கடை தொலைபேசி. நீங்கள் சொன்ன மாதிரி அந்த அம்மவையும் காசு பொருட்களையும் சேர்த்து அழகா படம் எடுத்திருக்கிறன். பாருங்கோ" என தான் எடுத்த படங்களை அவரிடம் காட்டினான். அவற்றை பார்த்து மகிழ்ந்த அந்தப் பெரியவர் தான் பார்த்த படங்களின் மேல் தனது சுண்டு விரல்களால் மெல்ல அழுத்தினார்.

அழுத்தியதும் 'டிலீற் செயர்ஸ் எடிற்' என்ற வாசகங்கள் முன்னால் குதித்து விழுந்தன. அதைப் பார்த்த பெரியவரின் விரல் 'டிலீற்' என்ற பதத்தை அழுத்த இளைஞன் பதிவு செய்த படங்கள் அத்தனையும் மாயமாக மறைந்தன.

இதை அவதானித்த அவ்விளைஞன், "என்னையா இப்படி செய்து போட்டியள் இனி எபபடி பேஸ் புக்கிலை படங்களை போடப் போறியள்?"

"தம்பி நானுன்னை படம் பிடிச்சு வரச்சொன்னது பேஸ் புக்கிலை அதையெல்லாம் போட்டு என்ரை பெருங்கொடையை பறை சாற்ற இல்லைத் தம்பி. எனக்கு ஒரு மன ஆறுதலுக்காகத்தான்... தம்பி படமெடுக்கச் சொன்னனான். வலது கை கொடுத்ததை இடது கை அறிஞ்சாலே நாம கொடுத்ததின்ரை பலனே அற்றுப் போகுமடா" என மிக சாதாரணமாக சொன்ன ஜீ.எஸ். சுந்தரமூர்த்தியைப் பார்த்து அதிசயித்த அந்ந இளைஞன் "ஒரு அங்கர் பெட்டியை கொடுதுவிட்டே பேஸ் புக்கிலை போட்டு அசத்தும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதரா" என வியந்தபடி தனது உந்துருளியை உயிர்ப்பித்து பறந்துசென்றான் அவன்.

புதுடெல்லி

# “எந்த மாநிலத்தையும் புறக்கணிக்கவில்லை”

மத்திய பட்ஜெட்டில் பல்வேறு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டு உள்ளது” என ராஜ்யசபாவில் எதிர்க்கட்சி தலைவர் கார்கே குற்றம்சாட்டிய நிலையில், அதனை மறுத்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், “பட்ஜெட்டில் எந்த மாநிலமும் புறக்கணிக்கப்படவில்லை. பாரபட்சம் காட்டவில்லை” என பதிலடி கொடுத்தார்.

ராஜ்யசபா கூடியதும் எதிர்க்கட்சி தலைவர் கார்கே பேசும் போது, “பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்பட்டு உள்ளது. மாநிலங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. அநீதி இழைக்கப்பட்டு உள்ளது. சில மாநிலங்களுக்கு அதிக நிதி வழங்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இது நாற்காலியை காப்பாற்றும் பட்ஜெட்” என அவர் கூறினார்.

பிறகு எதிர்க்கட்சி எம்.பிக்கள் வெளிநடப்பு செய்தனர்.

அதற்கு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலளிக்கையில், “பட்ஜெட்டில் எந்த மாநிலத்தையும் புறக்கணிக்கவில்லை. எந்த பாரபட்சமும் காட்டவில்லை. எனது பதிலுரையை கேட்காமல் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

முந்தைய பட்ஜெட்டில் ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிடப்பட்டதா? பட்ஜெட் உரையில் எல்லா மாநிலங்களின் பெயரையும் குறிப்பிட வாய்ப்பு



கிடைப்பதில்லை. மாநிலங்களின் பெயரை குறிப்பிடவில்லை என்றால், அது புறக்கணிப்பு ஆகாது. பட்ஜெட்டில் மாநிலங்களின் பெயரை குறிப்பிடாவிட்டாலும், திட்டங்களின் பலன்கள் மக்களை சென்றடையும்.

எதிர்க்கட்சிகள் திட்டமிட்டே மத்திய அரசு மீது குற்றம்சாட்டுகின்றன. மக்களை தவறாக வழிநடத்த காங்கிரஸ் கட்சி முயற்சி செய்கிறது. மேற்கு வங்கத்தில், நிதி அளித்தும் மத்திய அரசின் திட்டங்களை அம்மாநில அரசு அமல்படுத்தவில்லை. பிரதமரின் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை” இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியா

# சிறுமி வன்புணர்வு; 3 முதியவர்கள் கைது

இந்தியாவின் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த 13 வயது சிறுமி 3 முதியவர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை (21) பாடசாலை விடுமுறை என்பதால் சிறுமியை வீட்டில் இருத்தி விட்டு தாய் கூலி வேலைக்கு சென்றுள்ளார்.

அவர் வீட்டிற்கு திரும்பி வந்தபோது, அவரது வீட்டிற்கு சிலர் வந்து சென்றதாகவும், அது பற்றி சிறுமியிடம் விசாரிக்கும்படியும் அயலவர்கள் கூறியுள்ளனர். இது பற்றி சிறுமியின் தாய், அவரிடம் விசாரித்துள்ளார். அப்போது ராஜேந்திரன் (வயது 65), பன்னீர்செல்வம் (வயது 76),



சின்னத்தம்பி (வயது 70) ஆகியோர் தன்னை மிரட்டி, பலமுறை பாலியல் வன்புணர்வு செய்ததாக கூறி சிறுமி அழுதுள்ளார். இதுகுறித்து சிறுமியின் தாய் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, குறித்த 3 முதியவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குஜராத்

ஒரு கிராமத்தையே விற்ற

# 6 பேர் கைது



குஜராத்தில் ஆறு பேர் கொண்ட குழுவொன்று, போலி ஆவணங்கள் மூலம் கிராமம் ஒன்றையே விற்பனை செய்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

குஜராத் மாநிலம் காந்திநகர் மாவட்டம் தேகாமில் உள்ள ஜூனா பஹாடியா கிராமத்தில்தான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடந்த மாதம் 13ஆம் திகதி, காந்திநகர் மாவட்டத்தின் துணைப் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு நில ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு அந்த நிலத்தை, ஆறு பேர் ராஜ்கோட்டைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த 13ஆம் திகதி விற்பனை செய்துள்ளனர்.

இதுதொடர்பாக 7 பேர் மீது பொலிஸில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அதாவது அந்த நிலத்தில், 700க்கும் மேற்பட்ட மக்களும் 88 வீடுகளும் கொண்ட ஒரு முழு கிராமமும் விற்கப்பட்டிருப்பதுதான் ஆச்சர்யமான செய்தி. மோசடியான, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி 2 கோடி ரூபாய்க்கு இந்த நிலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அதாவது, பிகாஜி தாக்கூர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிலம், 1987லேயே ஒரு சிலருக்கு விற்கப்பட்டுள்ளது. மீதி நிலம்தான் அவருக்குப் பிறகு அவரது சந்ததியினருக்கு சென்றுள்ளது. இதில் நிலத்தை வாங்கியவர்கள் அதில் வீடு கட்டி குடியேறியுள்ளனர். அந்த வகையில், அங்கு தற்போது 88 குடும்பங்கள் உள்ளன. இந்த நிலையில்தான் பிகாஜி தாக்கூரின் வாரிசுகள் போலி ஆவணங்கள் மூலம் அவர்களுக்கு விற்ற இடத்தையும் சேர்த்து மொத்தமாய் விற்றுள்ளனர். அதாவது, இந்த நிலத்தின் உரிமையைக் காட்டி பிகாஜி தாக்கூரின் வாரிசுகள் கடன் வாங்கியுள்ளனர்.

அதனை ஈடுகட்டவே இந்த மொத்த கிராமத்தையும் விற்றிருப்பதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பாக பொலிஸார் புகார் பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

லொஸ் ஏஞ்சலஸ்


பார்வை மாற்றுத்திறனுள்ள

# புதிய ‘பார்பி பொம்மை’

‘பார்பி பொம்மைகள்’ உலக அளவில் பரவலாக அறியப்படும் பிரபல பொம்மையாக உள்ளன. இவற்றை தயாரித்து வரும் மேட்டல் நிறுவனம் தற்போது பார்வை மாற்றுத்திறன் கொண்ட ‘பார்பி பொம்மை’யை சந்தைக்கு கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் ‘பார்பி பொம்மை’களின் உலகம் மேலும் விரிவடைந்துள்ளது.

1959ஆம் ஆண்டு ‘பார்பி பொம்மை’ அறிமுகமான நிலையில், தொடர்ந்து அவை, உலகம் முழுவதும் பிரபலமடைந்தன. பிரபலத்துக்கு ஏற்ப ‘பார்பி பொம்மைகள்’ மீது விமர்சனங்களும் அதிகரித்தன.

யதார்த்தத்தை ‘பார்பி பொம்மைகள்’ தருவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. நிறம் சார்ந்து ‘பார்பி பொம்மைகள்’ மீது விமர்சனங்கள் வைக்கப்பட்டன.





பார்பிகள் மனித இனத்தின் ஒரு குறிப்பிட்ட நிறத்தை தூக்கிப் பிடிக்கிறது. இதனால், குழந்தைகள் தாழ்வு மனப்பான்மைக்கு தள்ளப்படுகின்றன என்ற குரல்களும் வலுத்தன.

இதனைத் தொடர்ந்து ‘பார்பி பொம்மை’களை வெளியிட்ட மேட்டல் நிறுவனம் மாற்றதுக்கு தயாரானது. 2016இல் ஆசியா, ஆபிரிக்கா அனைத்து இன நிறங்களை பிரதிபலிக்கும் ‘பார்பி பொம்மைகள்’ வெளியிடப்பட்டன.

விபத்தில் காயமடைந்த பார்பி, சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் ‘பார்பி’, ‘டவுன் சிண்ட்ரோம்’ பாதிப்பு கொண்ட ‘பார்பி’, வெண்புள்ளிகள் கொண்ட ‘பார்பி’ என வெவ்வேறு ‘பார்பி’கள் வெளியாகின. இந்தச் சூழலில் தற்போது பார்வை மாற்றுத்திறன் கொண்ட ‘பார்பி’ வெளியாகி உள்ளது.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# முன்னேறினார் ஹரி ப்ரூக்




சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஹரி ப்ரூக் முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 145 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஏழாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு, 1.கேன் வில்லியம்சன், 2.ஜோ றூட், 3.ஹரி ப்ரூக், 4.பாபர் அஸாம், டறைல் மிற்செல், 6.ஸ்டீவன் ஸ்மித், 7.றோஹித் ஷர்மா, 8. யஷஸ்வி ஜைஸ்வால், 9.திமுத் கருணாரத்ன, 10.விராட் கோலி.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவிச்சந்திரன் அஷ்வின், 2.ஜொாஷ் ஹேசில்வூட், ஜஸ்பிரிட் பும்ரா, 4.ககிஸோ றபாடா, 5.பற் கமின்ஸ், 6.நேதன் லையன், 7.இரவீந்திர ஜடேஜா, 8.ஜேம்ஸ் அன்டர்சன், 9.ஷகீன் ஷா அஃப்ரிடி, 10.கைல் ஜேமிசன்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவீந்திர ஜடேஜா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ஷகிப் அல் ஹஸன், 4.ஜோ றூட், 5.அக்ஸர் பட்டேல்.

# மோர்கன் நிராகரித்தார்



இங்கிலாந்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான பயிற்சியாளர் மத்தியூ மொட்டைப் பிரதியிடுவதை அவ்வணியின் முன்னாள் அணித்தலைவர் ஒய்ன் மோர்கன் நிராகரித்துள்ளார்.

தனது நான்கு ஆண்டுகள் ஒப்பந்தத்தில் நடுவில் காணப்படும் மொட், சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரை நியமனத்திலிருந்து ஆறு மாதங்களிலேயே வென்றபோதும் இறுதி உலகக் கிண்ணத் தொடர் மற்றும் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்தின் பெறுபேறுகள் காரணமாக அழுத்தத்தில் காணப்படுகிறார்.

# கிழக்கில் பிரகாசித்த நௌசாத்

தேசிய விளையாட்டு விழாவின் ஓரங்கமான கிழக்கு மாகாண விளையாட்டு விழாவானது அண்மையில் நடைபெற்றபோது, ஒலுவிலைச் சேர்ந்த பி.எம்.நௌசாத் ஐந்து தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப்பதக்கம் உள்ளடங்கலாக ஆறு பதக்கங்களை சுவீகரித்து தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் 400 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் தடை தாண்டல், 4X400 மீற்றர் அஞ்சலோட்டம், 4X100 மீற்றர் அஞ்சலோட்டம், 4X400 மீற்றர் கலப்பஞ்சல் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களையும், 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றார்.




# ‘எடெர்சனின் சிற்றி எதிர்காலம் நிச்சயமில்லை’

நடப்புப் பருவகாலத்தில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் கோல் காப்பாளரான எடெர்சன் கழகத்தில் இருப்பாரா என தனக்கு உறுதியாகத் தெரியாதென அக்கழகத்தின் முகாமையாளர் பெப் குவார்டியோலா தெரிவித்துள்ளார்.

எடெர்சனைக் கைச்சாத்திட சவூதி அரேபியக் கழகங்கள் முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவிலிருந்து சிற்றியில் 2017ஆம் ஆண்டு இணைந்த 30 வயதான எடெர்சன், சிற்றிக்காக 250 போட்டிகளில் விளையாடியுள்ளார்.





# ஆஷஸில் ஆட விரும்பும் ஆர்ச்சர்

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள 2025-26 ஆஷஸ் தொடரில் விளையாட விரும்புவதாக இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் ஜொஃப்ரா ஆர்ச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆரம்பம் முதலில் கடந்த மூன்றாண்டுகளாக முதுகு, முழங்கை உபாதைகள் காரணமாக டெஸ்ட் போட்டிகளில் 29 வயதான ஆர்ச்சர் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் ஆர்ச்சர் பங்கேற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 25 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.